Crl.Misc.39

D E P O S I T I O N   O F   W I T N E S S
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, THIRUKALUKUNDRAM.

Case No. CC.71/2022

**P.W**.1

| | |
|---|---|
| Name | : **திரு.கோவிந்தசாமி** |
| Father/Husband Name | : திரு.நாகப்பன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**எதிரி ஆஜரில் உள்ளார்.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.03.2023

**முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது வசுவசமுத்திரம் கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன முத்து எனது பெரியப்பா மகன் ஆவார்.**

**2) கடந்த 2016 ம் வருடம் ஒரு நாள் ஆயப்பாக்கத்திலிருந்து வேலைக்காக எனது மகன் முத்து, மணிகண்டன் மற்றும் வெங்கடேசன் ஆகியோர்கள் இருசக்கர வாகனத்தில் நெரும்பூர் அருகே சென்று கொண்டிருந்தபோது தெற்கே இருந்து வடக்கு நோக்கி வந்த அறுவடை இயந்திர வாகனம் இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது. அதில் எனது பெரியப்பா மகன் முத்துவிற்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. மணிகண்டன் மற்றும் வெங்கடேசன் ஆகியோருக்கு காயம் ஏற்பட்டது. அவர்களை சிகிச்சைக்காக செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு**

கொண்டு சென்று சேர்த்தபோது முத்து வழியிலேயே இறந்துவிட்டதாக சொன்னார்கள். மற்றவர்கள் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார்கள். இது குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை,</u>

விபத்து நடந்தபோது நான் எங்கே இருந்தேன் என்றால் வசுவசமுத்திரம் கிராமத்தில் இருந்தேன். விபத்தை நான் நேரிடையாக பார்த்தேனா என்றால் இல்லை. என் மாமா மகன் யுவராஜ் போன் மூலம் தகவல் சொன்னார். நான் ஒரு மணி நேரம் கழித்து சம்பவ இடம் சென்று பார்த்தேன். அப்போது அடிப்பட்டவர்கள் அங்கேயே இருந்தார்கள். அதன்பிறகு தான் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். மேற்கண்ட விவரங்களை போலிஸ் விசாரணையிலும், புகார் மனுவிலும் சொல்லியுள்ளேன். மருத்துவமனைக்கு நான் உடன் சென்றேன். என்னுடன் யுவராஜ், மோகன், மனோகரன் மற்றும் சிலர் வந்தார்கள். அவர்கள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள். அன்று இரவு முழுவதும் நான் மருத்துவமனையில் இருந்தேன். பிரேத பரிசோதனையை முடித்து மறுநாள் பிரேதத்தை பெற்றுக்கொண்டு வசுவசமுத்திரம் வந்தோம். புகார் மனுவை எப்போது கொடுத்தேன் என்றால் விபத்து நடந்த இரண்டு மணி நேரத்தில் புகார் கொடுத்தேன். சம்பவத்தன்றே போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்ற மணிகண்டன் சாலை விதிகளை மதிக்காமல் மூவர் பயணம் செய்து

அஜாக்கிரதையாக வாகனம் ஓட்டி அறுவடை இயந்திரத்தில் பின்புறமாக மோதி விபத்து ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும், விபத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. புகார் மனுவை எங்கள் ஊர் காரர் எழுதினார். யார் என்று தற்போது நினைவில்லை.

Certified that the examination of the accused was taken by me and that the records contains full and true on account of the statement made by him/her. It has been read over to him/her and admitted by him/her to be correct.

Sd/-A.Kadhiravan,
J.M/TKM.

D E P O S I T I O N  O F  W I T N E S S
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC.71/2022

**P.W**.2

| | |
|---|---|
| Name | : **திரு.மணிகண்டன்** |
| Father/Husband Name | : திரு.கன்னியப்பன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**எதிரி ஆஜரில் உள்ளார்.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.03.2023

**முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது வசுவசமுத்திரம் கிராமத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்த முத்து எனது ஊர்காரர் ஆவார். காயம்பட்ட வெங்கடேசன் எனது மாமா ஆவார்.**

**2) கடந்த 2016ம் வருடம் 6வது மாதம் ஒரு நாள் நானும், முத்து மற்றும் வெங்கடேசன் ஆகியோர் இருசக்கர வாகனத்தில் வாயலூரிலிருந்து நெரும்பூர் நோக்கி சென்று கொண்டிருந்தபோது அறுவடை இயந்திர வாகனம் இடப்பக்கத்திலிருந்து வந்து எங்கள் வாகனத்தின் மீது மோதிவிட்டது. நாங்கள் கீழே விழுந்துவிட்டோம். அதில் எனக்கு மார்பில் காயம் ஏற்பட்டது. வெங்கடேசனிற்கு தலையில் காயம் ஏற்பட்டது. முத்துவிற்கு தலையில் காயம் ஏற்பட்டு சுயநினைவு இல்லாமல் இருந்தார்.**

பிறகு முத்து இறந்துவிட்டதாக சொன்னார்கள். ஆம்புலன்சு மூலம் செங்கல்பட்டு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அன்றைய தினம் அறுவடை இயந்திரத்தை ஓட்டி வந்த நபரை நான் சரியாக பார்க்கவில்லை. போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை,</u>**

விபத்து நடந்த மறுநாள் போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். காவல் நிலையத்திற்கு வரவழைத்து விசாரித்தார்கள். (சாட்சி மீண்டும் மருத்துவமனையில் வைத்து விசாரித்ததாக சொல்கிறார்) பொதுவாக நான் 50 கி.மீ வேகத்தில் இருசக்கர வாகனம் ஓட்டுவேன். எனக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்றால் உள்ளது. ஓட்டுநர் உரிமத்தை போலிசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் ஆமாம். முதல் விசாரணையில் நான் சொல்லியுள்ள விபத்து ஏற்பட்ட விதம் மற்றும் காயம் ஏற்பட்ட இடங்கள் குறித்து போலிஸ் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். விபத்து நடந்த நேரம் 11.00 மணி இருக்கும். விபத்து நடந்தவுடன் எனக்கு சுயநினைவு இல்லை. அதனால் யார் யாருக்கு எங்கு காயம் ஏற்பட்டது என்பது குறித்தும் எந்த மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்பது குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான். அறுவடை இயந்திரம் சுமார் 30 கி.மீ வேகம் செல்லுமா என்றால் தெரியாது. விபத்து நடந்த இடம் வாயலூரிலிருந்து அரை கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. அந்த இடத்தில் டாஸ்மாக் கடை உள்ளது என்றால் சரிதான். அந்த டாஸ்மாக் கடையில் நான் அடிக்கடி மது அருந்த செல்வேன் என்றால் சரியல்ல. மெதுவாக சென்று கொண்டிருந்த அறுவடை இயந்திரத்தில் மது அருந்திவிட்டு மூன்று பேர் இருசக்கர வாகனத்தில் அஜாக்கிரதையாக

சென்று பின்பக்கத்தில் மோதி விபத்து ஏற்படுத்தினோம் என்றால் சரியல்ல. விபத்திற்கும், எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. சாட்சிகள் ஒரே ஊர்காரர்கள் என்பதால் எங்கள் தவறை எதிரி மீது சுமத்திவிட்டோம் என்றால் சரியல்ல. இழப்பீடு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளோமா என்றால் தெரியாது. விபத்திற்கு காரணம் நான் தான் என்றால் சரியல்ல.

Certified that the examination of the accused was taken by me and that the records contains full and true on account of the statement made by him/her. It has been read over to him/her and admitted by him/her to be correct.

Sd/-A.Kadhiravan,
J.M/TKM.

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC.71/2022

**P.W**.3

| | |
|---|---|
| Name | : **திரு.வெங்கடேசன்** |
| Father/Husband Name | : திரு.வேதகிரி |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**எதிரி ஆஜரில் உள்ளார்.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.03.2023

**முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது வசுவசமுத்திரம் கிராமத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்த முத்துவை தெரியும். காயம்பட்ட மணிகண்டனை தெரியும்.**

**2) கடந்த 2016 ம் வருடம் ஒரு நாள் வாயலூரிலிருந்து நெரும்பூர் நோக்கி இருசக்கர வாகனத்தில் நானும், முத்து மற்றும் மணிகண்டன் ஆகியோர் சென்றபோது 11.00 மணியளவில் இடப்பக்கம் பள்ளத்திலிருந்து ரோட்டின் மீது ஏறி வந்த அறுவடை இயந்திரம் எங்கள் மீது மோதிவிட்டது. அதில் எனக்கு தலையில் காயம் ஏற்பட்டது. எனக்கு நினைவு போய்விட்டது. பிறகு என்னை மருத்துவமனையில் சேர்த்தார்கள். மறுநாள் எனக்கு முத்து இறந்துவிட்டதாக தகவல் சொன்னார்கள். போலிசார் என்னை விசாரணை செய்தனர்.**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை,</u>**

நான் இருசக்கர வாகனத்தில் கடைசியாக உட்கார்ந்து வந்தேன். அன்றைய தினம் நான் மது அருந்தியிருந்தேனா என்றால் இல்லை. போலிசார் என்னை மறுநாள் விசாரித்தார்கள். காயம்பட்ட இடங்கள் குறித்து போலிசார் விசாரணையில் சொன்னேன். விபத்து நடந்தவுடன் எனக்கு சுயநினைவு போய்விட்டது . அதன்பிறகு நடந்தது எதுவும் எனக்கு தெரியாதா என்றால் ஆமாம். இழப்பீடுகோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். நான் சொன்னது போல் சொன்ன விதத்தில் விபத்து நடைபெறவில்லை என்றாலும் எதிரிக்கும், விபத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல. மணிகண்டன் அஜாக்கிரதையாக வண்டி ஓட்டி அறுடை இயந்திரத்தில் பின்பக்கம் மோதி விபத்து ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. சாட்சிகள் எனது ஊர்காரர்கள் என்பதால் வழக்கிற்கு ஆதரவாக தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Certified that the examination of the accused was taken by me and that the records contains full and true on account of the statement made by him/her. It has been read over to him/her and admitted by him/her to be correct.

Sd/-A.Kadhiravan,
J.M/TKM.